செ.வெ.எண்:34/ஜனவரி                                                                 நாள்: 21.01.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**நலிந்த நிலையிலுள்ள சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதிய உதவித்தொகைக்கான விண்ணப்பங்கள் வழங்கப்படவுள்ளன**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

விளையாட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்று தற்போது நலிந்த நிலையிலுள்ள சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதிய உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

தகுதிகள்:

1. குறைந்தபட்ச தகுதி

   அ. சர்வதேச / தேசிய அளவு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பு

   ஆ. இப்போட்டிகளில் முதலிடம் / இரண்டாமிடம் / மூன்றாமிடம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

   இ. தங்களது இளவயது காலங்களில் சாதனை படைத்தவர்கள் மட்டுமே தகுதி பெறுவர்

   ஈ. முதியோருக்கான போட்டிகள் மற்றும் அழைப்புப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறத் தகுதியில்லை.

2. 2015 ஏப்ரல் முதல் தேதியன்று 58 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரரின் மாத வருமானம் ரூ.6,000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்)-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
4. மத்திய அரசின் விளையாட்டு வீரருக்கான ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் மத்திய / மாநில அரசின் கீழ் ஓய்வூதியம் பெறுவோர் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறத் தகுதி இல்லை.
5. ஓய்வூதியப் படிவத்தை, எச்சூழ்நிலையிலோ, அடிப்படையிலோ, நிராகரிக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துக்கு உரிமை உண்டு.

இதற்கான விண்ணப்பத்தினை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அலுவலக நேரத்தில் உரிய விண்ணப்பத் தொகை ரூ.10/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சீதக்காதி சேதுபதி விளையாட்டரங்கம், மாவட்ட ஆட்சியர் வளாகம், இராமநாதபுரம் 623 503 அலுவலக தொலைபேசி எண் : 04567 - 230 238

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை ஒப்படைக்க வேண்டிய கடைசி தேதி : 31.01.2016

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**